ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/63 - 2018 අප්‍රේල් මස 01 වැනි ඉරිදා - 2018.04.01

*2064/63 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

195 (1) ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 195 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் பந்தி (அ) வின் விடயம் (vi) இன் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் முதியன்செலாகே லலித் ஜவன் திஸாநாயக ஆகிய நான் இந்த அறிவித்தலின் மூலம் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ள ஆட்கள், அதற்காக விண்ணப்பமொன்றை ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதன் மூலம் பதிவுசெய்யப்படுவார்கள் என்று குறித்துரைக்கின்றேன்.

டி. எம். எல். ஜ. திஸாநாயக,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 02,
2018, ஏப்பிறல் 01.

**அட்டவணை 01**

பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஆளாக இருத்தல் வேண்டும்,

1. இலங்கையின் பிரசையாகவும் வதிவுள்ளவராகவும் உள்ள;
2. இருபத்தியொரு வருட வயதை அடைந்துள்ள;
3. பின்வரும் தகைமைகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்திசெய்துள்ள;

(I) இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையில், இரண்டாம் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்த வரி மதிப்பீட்டாளராக அல்லது உதவி ஆணையாளராக இருந்து அந்த இரண்டாம் திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் ஐந்து வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்டவராக இருந்திருத்தல்; அல்லது

(II) கம்பனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு கணக்காய்வாளராகப் பதிவுசெய்துள்ள ஒரு தனிப்பட்ட ஆளொருவராக இருத்தல்; அல்லது

(III) போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை கணக்காய்வாளர் சேவைக்கு நியமிக்கப்பட்டு அதன் கணக்காய்வு அத்தியட்சகர் வகுப்பு II இற்குக் குறையாத ஒரு அங்கத்தவராக இருத்தல்; அல்லது

(IV) போட்டிப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை கணக்காளர் சேவைக்கு நியமிக்கப்பட்டு அச்சேவையின் வகுப்பு II இற்குக் குறையாத ஒரு அங்கத்தவராக இருத்தல்; அல்லது

(V) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சான்றுப்படுத்தப்பட்ட வரி ஆலோசகர்; அல்லது

(VI) தகுதிவாய்ந்த ஆளாகுவதற்கு -

1. பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பூர்த்திசெய்திருத்தல் :

(அ) நிறைவேற்றுத் தரம் I பரீட்சை/ கணக்கீட்டு மற்றும் வணிகச் சான்றிதழ் (CAB) மட்டம்/ சான்றுப்படுத்தப்பட்ட வணிகக் கணக்காளர் (CBA) ;

(ஆ) முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் (CIMA) வணிகக் கணக்கீட்டுச் சான்றிதழ்;

(இ) பட்டய சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர் சங்கத்தின் தொழில்வாண்மை அடிப்படை மட்டம் (ACCA);

(ஈ) இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் (CMA) நிறுவனத்தின் சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்களின் முகாமைத்துவ மட்டம் (மட்டம் 03) இடைநிலை மட்டச் சான்றிதழ்;

(உ) கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் (AAT) அங்கத்துவம்;

அத்துடன்

(ii) கணக்கீட்டுத் துறையில் ஆகக் குறைந்தது பத்து வருட தகைமைக்குப் பின்னரான அனுபவத்தைக் கொண்டிருத்தல் (சுயதொழில் செய்வதன்று);

அத்துடன்

4. பின்வருவனவற்றை கொண்டவராக இல்லாதிருத்தல் -

(அ) புத்திசுயாதீனமற்றவர் என்று தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல்; அல்லது

(ஆ) திவாலான அல்லது வங்குரோத்து நிலையை அடைந்த ஆளாகத் தீர்மானிக்கப்பட்டு, அவருடைய திவால் அல்லது வங்குரோத்து நிலைமை முற்றாக அல்லது பகுதியளவில் தவிர்க்கமுடியாத நட்டங்களினால் அல்லது அனர்த்தங்களினால் ஏற்பட்டதாக தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் சான்றிதழொன்று வழங்கப்படாதவராக இருத்தல்; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் ஒரு இடத்தில், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஏதேனும் குற்றமொன்றில், தார்மீக ரீதியில் இழிவான செயற்பாடொன்றில் தொடர்புபட்டிருப்பதாக தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல்; அல்லது

(ஈ) தொழில்சார் துர்நடத்தையொன்றை இழைத்தவராக இருத்தல்; அல்லது

(உ) இக்கட்டளையின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியல்லாத எவரேனும் தொழில்தருநர் ஒருவரின் (கணக்காய்வுக் கம்பனிகளைத் தவிர) கீழ் தொழிலொன்றைப் பொறுப்பேற்று உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாருவராகச் செயற்படல்;

பதிவுக்காக விண்ணப்பிக்கும் எவரேனும் தனிப்பட்ட ஆள், பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியானவர் என்று ஆணையாளர் நாயகம் திருப்தியடைவாராயின், அவர் அந்த ஆளைப் பதிவு செய்து அவரது பதிவைச் சான்றுப்படுத்தும் கடிதமொன்றை வழங்குதல் வேண்டும். ஆணையாளர் நாயகம், எவரேனும் ஆளொருவருக்கு தன்னால் வழங்கப்பட்டிருந்த சான்றிதழை இரத்துச் செய்து, அவருடைய பெயரை "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதிவேட்டில்" இருந்து பின்வரும் சந்தர்ப்பங்களில் நீக்குவார் -

(I) தனது பெயரை நீக்குமாறு எழுத்துமூலம் கோரியிருத்தல்;

(II) இந்த அட்டவணையின் விடயம் 4 இன் கீழ் உள்ள எந்தவொரு உப விடயமொன்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு இயலாமைக்கும் ஆளாகி இருத்தல்;

(III) அந்த தனது தொழில் அந்தஸ்த்தில் செய்த ஏதேனும் ஒரு செயல், கவனயீனமொன்று அல்லது நேர்மையீனமொன்று அல்லது மோசடியொன்றின் காரணமாக, அந்த ஆளின் பெயரை நீக்க வேண்டும் என்று ஆணையாளர் நாயகம் தீர்மானித்தல்.

ஆணையாளர் நாயகம், இந்த கட்டளையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் பட்டியலொன்றை ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரு முறையாவது, அந்த வருடத்தின் மார்ச் 31 ஆந் திகதி முடிவடைவதற்குள் வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

05-186

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.